# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2373/33 – 2024 පෙබරවාරි මස 29 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.02.29

*2373/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2365/65 ஆம் இலக்க மற்றும் 2024.01.04 ஆந் திகதிய, 2248/10 ஆம் இலக்க மற்றும் 2021.10.04 ஆந் திகதிய, 2131/60 ஆம் இலக்க மற்றும் 2019.07.13 ஆந் திகதிய, 2074/45 ஆம் இலக்க மற்றும் 2018.06.08 ஆந் திகதிய மற்றும் 2043/13 ஆம் இலக்க மற்றும் 2017.10.30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2014/3 ஆம் இலக்க மற்றும் 2017.04.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அதிகாரக் கையளிப்புடன் பின்வரும் அதிகாரக் கையளிப்புக்களும் உள்ளடக்கப்பட்டு திருத்தியமைக்கப்படுகிறது. இந்தத் திருத்தமானது 2024.02.27 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை அதிபர்சேவையின்உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமிப்பு பதவியில் நிரந்தரமாக்கல் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக ஓய்வு பெறச் செய்தல் |

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**டப்ளியூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,**
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,*
*இலக்கம் 1200/9, இராஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2024, பெப்புருவரி 02 ஆந் திகதி.*

EOG 02 - 0198

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*